©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No.197/2009.
[Price: Rs. 1.60 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 378A] சென்னை, திங்கட்கிழமை, செப்டம்பர் 7, 2026
ஆவணி 21, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/2026

2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தியேழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

50–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (இதன்பின்னர் இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படும்) 50– ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (a) கூறின் (iii) உட்கூறில் "ஒரு இலட்சம் ரூபாய்" எனும் சொற்றொடருக்காக, "ஒரு கோடி ரூபாய்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

80–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டத்தின் 80–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது;–

"80–A. அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.– அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, அத்தகைய அறிவிக்கையில் குறிப்பிடப்படக்கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின்கீழ், ஏதேனும் ஓர் அதிகார அமைப்பால் அல்லது அலுவலரால் செலுத்தப்படக்கூடிய எந்தவொரு அதிகாரத்தையும், அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்படக்கூடிய மற்றொரு அதிகார அமைப்போ அல்லது அலுவலரோ செலுத்தலாம் என்று ஆணையிடலாம்.".

நோக்கக் காரண விளக்கவுரை

2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 19/2017) நிலுவையில் உள்ள பெருமளவிலான மேல்முறையீடுகள் மற்றும் அதிகப்படியான பணிச்சுமையைக் கருத்தில் கொண்டு, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006), 1959– ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 1 /1959) மற்றும் 1956–ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டம், (மையச் சட்டம் 74/1956) ஆகியவற்றின்கீழ் செயல்பட்டுவந்த மேல்முறையீட்டுத் துணை ஆணையர்களை தமிழ்நாடு சட்டம் 19/2017–இன் கீழ் மேல்முறையீட்டு அலுவலர்களாக மறு பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். அத்தகைய நிர்வாகத்தின் அவசரத் தேவைகளைச் சமாளிக்கும் வகையில், அதிகாரங்களை ஒப்படைவு செய்வதற்கான வகைமுறைகள் எதுவும் இல்லாததன் விளைவாக, தமிழ்நாடு சட்டம் 32/2006–இன் கீழ் செய்யப்படும் மேல்முறையீடுகளைத் தீர்வு காண்பதில் சிக்கல்கள் எழுகின்றன. எனவே, இத்தகைய சிக்கல்களைத் தவிர்க்கும் வகையில், ஓர் அதிகாரஅமைப்பால் அல்லது அலுவலரால் செலுத்தப்படக்கூடிய அதிகாரத்தை, மற்றொரு அதிகார அமைப்பிற்கோ அல்லது அலுவலருக்கோ ஒப்படைத்து செயல்படுத்துவதற்கு வழிவகை செய்யும் வகையில் ஒரு பொருத்தமான வகைமுறையை ஏற்படுத்துவது அவசியமாகிறது.

2. மேலும், மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவும், தற்போது ஏற்பட்டுள்ள வழக்குத் தொடரும் நடைமுறை மாற்றங்களைக் கருத்தில் கொண்டும், குறிப்பாக குறைந்த மதிப்புள்ள துறைசார் மேல்முறையீடுகளைத் திரும்பப் பெறும் நடைமுறையை கருத்தில் கொண்டும், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 50–ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (a) கூறின் (iii) உட்கூறில் திருத்தம் செய்வதன் மூலம், மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் ஓர் உறுப்பினர் தனியாக விசாரித்து முடிவு செய்யக்கூடிய, ஆட்சேபணைக்குரிய விற்றுமுதல் தொகைக்கான வரம்பை, தற்போதுள்ள ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது; இதன் மூலம், அதிக எண்ணிக்கையிலான மேல்முறையீடுகளை விரைவாக விசாரணை செய்து இறுதித் தீர்வு காண இயலும்.

3. எனவே அரசு, மேற்கூறிய நோக்கங்களுக்காக, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 32/2006) தகுந்தவாறு திருத்தங்கள் மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் அளிக்க விழைகிறது.

த. லோகேஷ் தமிழ்செல்வன்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவின் 3–ஆம் கூறானது குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அறிவிக்கையை வெளியிடுவதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரம் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

த. லோகேஷ் தமிழ்செல்வன்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 செப்டம்பர் 7.

இரா. சாந்தி,
செயலாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.